PR/2018/31/T

# ஜப்பான் தூதரகம்

இல. 20, ஸ்ரீமத் ஆர்.ஜி. சேனாநாயக்க மாவத்த, கொழும்பு 7, இலங்கை

தொலைபேசி: 94-11-269-3831~3, தொலைநகல் : 94-11-269-8629

மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk

நவம்பர் 05, 2018

ஊடக அறிக்கை

## இலங்கையின் வடக்கு மாகாணத்தில் மிதிவெடிகள் அகற்றும் மனிதாபிமான பணிகளுக்கு ஜப்பான ஆதரவு

**ஜப்பான் அரசாங்கம், வடக்கு இலங்கையில் மிதிவெடிகளை அகற்றும் மனிதாபிமானப் பணிகளுக்காக அடிப்படை மனித பாதுகாப்பு திட்டத்தின் (ஜி.ஜி.பி) கீழ் 625,000 அமெரிக்க டொலர்கள் (சுமார் 97 மில்லியன் ரூபாய்) மானிய உதவியை வழங்கியுள்ளது.**

**"வடக்கு இலங்கையில் மீள்குடியேற்றத்திற்கும் வாழ்வாதாரத்திற்குமான மிதிவெடி அகற்றும் மனிதாபிமான திட்டம்" HALO Trust அறக்கட்டளையால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதோடு இந்த மானிய ஒப்பந்தமானது இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மேதகு திரு. அகிரா சுகியாமா மற்றும் ஹலோ டிரஸ்ட் நிறுவனத்தின் இடைக்கால திட்ட முகாமையாளர் திரு. மைக்கேல் டயெர் இடையே 2018 நவம்பர் மாதம் 5 ஆம் திகதி கொழும்பிலுள்ள தூதரக வசிப்பிடத்தில் கையெழுத்திடப்பட்டது. மிதிவெடிகளை அகற்றி உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் பாதுகாப்பான**

பிரதேசங்களில் மீள்குடியேற்றப்படவும் தங்கள் வாழ்வாதார நடவடிக்கைகளை மீண்டும் தொடரவும் இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இந்த திட்டம் உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது. உலகின் மிகப்பெரிய மற்றும் மிகப்பழமையான மனிதாபிமான மிதிவெடி அகற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் ஒன்றான HALO Trust நிறுவனம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அமைந்திருக்கும் மிதிவெடிகளை அகற்றும் பணியினை நடத்தவுள்ளது.

அடிப்படை மனித பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 33 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் அதிகமான மானிய உதவியினை வழங்கி ஜப்பான் 2003 முதல் இலங்கையில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணியின் ஒரு முக்கிய உதவி வழங்குனராக இருந்து வருகின்றது. இலங்கை அரசாங்கத்தின் 2020 ஆம் ஆண்டின் இலக்காக இருக்கும். நிலக்கண்ணி வெடி பாதிப்பற்ற பிரதேசங்களை உருவாக்குவதற்கும் விவசாய நிலங்களை மீளமைப்பதோடு, அதனை வசதிப்படுத்தி விரிவுபடுத்தவும், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றவும் இந்த பங்களிப்பு உதவியுள்ளது.

ஜப்பான், இலங்கையின் நீண்டகால ஹலோ உதவி வழங்குனராக இருந்து வருவதோடு. நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்காக வருடாந்தம் அதிகளவு நிதியினை வழங்கி வருகிறது. வடக்கில் நல்லிணக்க செயற்பாட்டிற்கும் ஆயிரக்கணக்கான மக்களின் மீள்குடியேற்றத்திற்கும் கண்ணி வெடி அகற்றும் செயற்பாடு முக்கிய பங்காற்றுகிறது. நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு பல ஆண்டுகளுக்கு பிறகும், மீதமுள்ளவை சவாலாக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஜப்பான்

**மற்றும் பிற நன்கொடையாளர்களின் தொடர்ச்சியான ஆதரவோடு தேசிய அரசாங்கமும் இணைந்து** 2020 **ஆம் ஆண்டின் இறுதிக்குள் நிலக்கண்ணி வெடி பாதிப்பற்ற இலங்கை என்ற குறிக்கோளை அடைய முடியும்**. **என ஆசிய பிராந்தியத்தின் ஹலோ தலைவரான திரு மத்தேயு ஹோவெல் கூறினார்**.

**************************************************************

மேலதீக விபரங்களுக்காக தயதுசெய்து அபிவிருத்தி கூட்டுறவு பகுதியினரை தொடர்புகொள்ளுங்கள்
தொலைபேசி: 011-269-3831~ext.225
**மின்னஞ்சல்:** cultujpn@co.mofa.go.jp